அறிவியல் கல்லூரியாக இருந்தது. அந்தக் கலை அறிவியல் கல்லூரி திருச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே, அங்கே படிப்பதற்கு, அந்தத் தனியார் கல்லூரியிலே படிப்பதற்கு, மாணவர்களுக்கு இயலாத சூழல் இருக்கிறது. எனவே, இதைக் கருத்திலேகொண்டு, கேட்டதையும் செய்கிறோம், கேட்காததையும் செய்கிறோம் என்று சொல்கிற நீங்கள், அந்தப் பின்தங்கியப் பகுதி மாணவ, மாணவிகளுடைய நலன் கருதி, மணப்பாறையிலே பலநோக்குக் கல்லூரியை அமைக்காவிட்டாலுங்கூட, அரசுக் கலை அறிவியல் கல்லூரியையாவது அமைத்துத் தர வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதைப்போல, மாவட்ட அளவிலேயே நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு புள்ளிவிவரங்களோடு செய்துகொண்டிருக்கின்றது. அடுத்த கட்டமாகத்தான் தாலுகா அளவிலே வரமுடியும். அதுவும் நிதிநிலையைப் பொறுத்தது. ஆகவே, மாவட்ட அளவிலே திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்துக் கல்லூரிகளும் நிறைந்து இருக்கிற ஒரு மாவட்டம். மணப்பாறை வட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அறிவியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரிகள் இல்லாது இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்குமானால் வருங்காலங்களில் பல்கலைக்கழகங்களின்மூலமாக அதைத் துவக்குவதற்கான ஏற்பாட்டினை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *73*, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

அலுவலகம்

***108017—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 21]

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி வட்டத்தில் போதிய போக்குவரத்து வாகனங்களும் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களும் இல்லாததால், தற்போது, விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், அவையில் இல்லை. அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா? அந்தப் பகுதியைச் சுற்றிலும் தனியார் போக்குவரத்து அதிகமாக இருப்பதால் விழுப்புரத்திற்கோ அல்லது அதற்கு அருகில் இருக்கின்ற அலுவலகத்திற்கோ செல்லவேண்டிய நிலையிருக்கின்றது. அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்தால், அங்கே இருக்கக்கூடியவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அரசு அதை அமைக்க முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தொடர்ந்து இந்த நான்கு ஆண்டுக் காலத்திற்கு முன்புவரை புதிய அலுவலகங்கள் அதிகமாகத் திறக்கப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5-வது முறையாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, சரக அலுவலகங்கள் புதியதாக 4-ம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் புதியதாக

15-ம், பகுதி அலுவலகங்கள் புதியதாக 19-ம், சோதனைச் சாவடி 1-ம் என்ற வகையிலே, கிட்டத்தட்ட 40 அலுவலகங்கள் புதியதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக ஆட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு நாளும் அதிகமாகும் வாகனங்களினுடைய எண்ணிக்கைக்கேற்ப அதனைக் கணக்கிட்டு எந்த இடத்தில் அலுவலகம் தேவையென்பதை அறிந்து, ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டுகூட கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் கட்டடங்கள் இல்லையோ அந்த இடங்களில் நிலம் இருக்குமானால், அந்த இடத்தில் கட்டடம் கட்டவும், ஏற்கெனவே இருக்கிற யூனிட் அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக மாற்றவும், புதிய யூனிட் அலுவலகங்களை அமைப்பதுவுமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலே, நம்முடைய செஞ்சி இல்லை. ஏனென்று கேட்டால், அங்கே வாகனங்கள் அதிகமாக இல்லை. South Arcot, North Arcot என்ற பழைய வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அதிகமான அலுவலகங்கள் அருகருகில் இருக்கின்ற காரணத்தால், செஞ்சியைத் தற்போது எடுக்கின்ற முயற்சி இல்லை. பிற்காலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீ.ஏ.டி. கலியவரதன், Substitute-க்கு இரண்டாவது supplementary கிடையாது.

வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

சுற்றுலா மையம்

***106226—திரு. ரா. வரதராஜன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைச் சுற்றியுள்ள பகுதியில் பூங்கா அமைத்து சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?